11.11.2019

மன்றப்பொருள்..1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அலுவலக 09.11.2019ந் தேதிய மின்னஞ்சல் அறிக்கையில், செங்கோட்டை நகராட்சியில் இயற்கை இடர்பாடுகள் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக குழாய் பதிக்கப்பட்டதன் காரணமாக பழுதடைந்த சாலைகள் ஆகியவைகளை பழுது நீக்கம் செய்ய மதிப்பீடுகள் தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட சாலைகளுக்கு ரூ. 110.62 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பம்புஹவுஸ் ரோடு (கே.சி.ரோடு முதல் பம்புஹஸ் ரோடு) மற்றும் முத்தழகி அம்மன் கோவில் தெரு ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல் | ரூ. 35.50 லட்சம் |
| 2 | சேர்வைகாரன் புதுத்தெரு, ரஹீம் நகர் சாலை, வெள்ளையப்பன் தெரு,, அண்ணா நகர் தெரு, சாம்பவர் தெரு மற்றும் காதர் ஒலி தெருவில் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | ரூ.. 75.12 லட்சம் |
| மொத்தம் | | ரூ. 110.62 லட்சம் |

அலுவலககுறிப்பு..

மேற்படி சாலைகளில் தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க ரூ. 110.62 லட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடிற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 110.62 லட்சத்தை அரசு நிதியில் முழுமான்யமாக பெற்று மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 188

அனுமதிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி பகுதிகளில் புதிய கிணறுகள் தோண்டுவது அல்லது ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவது, புரைமைப்பு மற்றும் புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பது தொடர்பாக, தனி நபரோ அல்லது பொது நிறுவனங்களோ விண்ணப்பபடிவம் அக்கிணறு அல்லது ஆழ்துளை கிணறு அமைந்துள்ள இடத்திற்கான நில உடமைச் சான்று மற்றும் வில்லங்கச் சான்றுடன் ஆணையர் செங்கோட்டை நகராட்சிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என அரசாணை எண் 72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சட்டம் 2015 மற்றும் அரசிதழ் 102 நாள். 30.04.2015-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விண்ணப்பங்கள் மீது நகராட்சி ஆணையர் அவர்கள் பரிசீலனை செய்து 30 தினங்களுக்குள் உரிய அனுமதி படிவம் ஆ-குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு..

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1401/2019/எப்1)

தீர்மானம் எண். 189

அனுமதிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சியில் உள்ள அம்மா உணவகம், டெங்குநோய் தடுப்பு பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்து EPF அலுவலகத்தில் கணக்கு தொடங்கி அங்கு செலுத்த வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் நகராட்சி வங்கி கணக்குகள் முடக்கி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உடனடியாக நகராட்சி வங்கி கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டது. எனவே, இதற்கு தடையாணை பெற வழக்கறிஞர் திரு எம்.சரவணக்குமார் மூலம் இடைக்கால தடையாணை, மாண்புமிகு நீதியரசர், சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளையில் பெறப்பட்டுள்ளது. மேற்படி இடைக்கால தடையாணை பெறுவதற்கு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 21500/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். **781/2012/எச்1)**

தீர்மானம் எண். 190

ஒப்புதல் வழங்கப்பட்டது.

# <u>22.11.2019</u>.

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் இணைப்பு இல்லாத குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க ஏதுவாக மாநில நெடுஞ்சாலைத்துறை சாலைகளாக கே.சி.ரோடு ம்ற்றும் காந்தி ரோடு பகுதியில், 1800 மீட்டருக்கு குடிநீர் விநியோக பிரதான குழாய் பதிப்பதற்கு, ரூ.5.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும், மேற்படி அரசு திட்டமான அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் Internal Plumbing பணியின் விரைந்து முடிக்கவேண்டிய அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி 13.11.2019 அன்று பெறப்பட்ட கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் இல்லாத மாநில நெடுஞ்சாலைத்துறை சாலைகளாக கே.சி.ரோடு ம்றறும் காந்தி ரோடு பகுதியில், 1800 மீட்டருக்கு குடிநீர் விநியோக பிரதான குழாய் பதிப்பதற்கு | ரூ. 5.00 லட்சம் | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் ஒப்பந்தக்காரர் | 5.43% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 0.50% மதிப்பீட்டை விட குறைவாக |

அலுவலககுறிப்பு

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.50% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ப்ரமசிவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 191

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் இணைப்பு இல்லாத குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க ஏதுவாக குடிநீர் விநியோக பிரதான குழாய் இல்லாத தெருக்களில் குடிநீர் விநியோக பிரதான குழாய் பதிப்பதற்கு, ரூ.8.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும், மேற்படி அரசு திட்டமான அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் Internal Plumbing பணியின் விரைந்து முடிக்கவேண்டிய அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி 13.11.2019 அன்று பெறப்பட்ட கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் இல்லாத குடிநீர் விநியோக பிரதான குழாய் இல்லாத தெருக்களில் குடிநீர் விநியோக பிரதான குழாய் பதிப்பதற்கு | ரூ. 8.00 லட்சம் | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் ஒப்பந்தக்காரர் | 5.44% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 0.47% மதிப்பீட்டை விட குறைவாக |

அலுவலககுறிப்பு

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.47% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ப்ரமசிவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 192

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கரிக்கப்படுகிறது.

மன்றப்பொருள..3

27.1.2019 அன்று மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர்கள் அவர்கள் நடத்திய ஆய்வு கூட்டத்தில் வர இருக்கும் வறட்சியினை கருதி குடிநீர் பிரச்சினை ஏற்படாதவாறு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் இலத்தூர் சாலையில் நித்தியகல்யாணி அம்மன் கோவில் அருகில் ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றினை பராமரிப்பு பணிமேற்கொள்ளவும் மற்றும் பழுதான நிலையில் உள்ள மின்மோட்டார் பழுது நீக்கம் செய்து வண்டிப்பேட்டை 30000 லிட்டர் மேல்நிலைநீர்த்தேக்கத்தொட்டி மற்றும் 7வது வார்டு கே.சி.சாலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றி 2,3,4,5,7,8மற்றும் 9 ஆகிய வார்டுகளுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் தினமும் வழங்க வேண்டி ரூ. 6.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.129 நாள். 23.02.2019 ல் அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.141 நாள். 05.03.2019ல் ஒப்புதல் வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது

இப்பணிக்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கவேண்டிய ரூ. 6.00 லட்சம் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் வழங்க இயலவில்லை எனவே, மேற்படி ரூ. 6.00 லட்சத்தை குடிநீர் வைப்பு நிதியில் இருந்து குடிநீர் பராமரிப்பு வரவு நிதிக்கு நிதி மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

தற்போது நகராட்சி நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும், குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், மேற்படி செலவினம் ரூ. 6.00 லட்சத்தை குடிநீர் வைப்புத் தொகை நிதியிலிருந்து, குடிநீர் பராமரிப்பு வரவு நிதிக்கு மாற்றம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 193

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..4

நகராட்சி அலுவலகத்தில் கணக்கர் இருக்கை அருகில் உள்ள கணினிக்குரிய மானிட்டர் பழுதாகி உள்ளதால், புதிதாக மானிட்டர் ஒன்று கொள்முதல் செய்யவும், அதற்குரிய செலவினம் ரூ. 5000/- வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 194

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மன்றப்பொருள்..5

செங்கோட்டை நகராட்சி பகுதியில் நடைபெற்று கொண்டிருக்கும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சி பணிகளின் சாதனைகளை தினத்தந்தி நாளிதழின் தொழில் மலரில் வெளியிட்ட வகைக்கு மேற்படி நாளிதழின் பட்டியல் தொகை ரூ. 21319/-னை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிடவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 195

ஒப்புதல் அளிக்கப்பட்டது

மன்றப்பொருள்..6

செங்கோட்டை நகராட்சி பகுதியில் நடைபெற்று கொண்டிருக்கும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சி பணிகளின் சாதனைகளை தினகரன் நாளிதழின் தொழில் மலரில் வெளியிட்ட வகைக்கு மேற்படி நாளிதழின் பட்டியல் தொகை ரூ. 9428/-னை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிடவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 196

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..

தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண். மூ.மு.(அ5)5235/2018, நாள். 08.01.2019 மற்றும் செங்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் எண்.மூ.மு.அ4/3124/2017, நாள். 30.08.2019ன் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட முத்துசாமி பூங்கா தெற்கு பகுதியில் உள்ள ஏ.ஜி.பள்ளிக்கூடம், பாதசாரிகள் மற்றும் பொது மக்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இடையூறாக உள்ள இரண்டு காய்ப்பு தென்னை மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த 29.11.2019 அன்று ஏலம் கோரியதில் கீழ்க்கண்ட நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள விவரம் வருமாறு,

| வ. எண் | கலந்து கொண்டவர்கள் விவரம் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி விவரம் |
|---|---|---|
| 1 | திரு.கே.முருகையா, 10/24 ராமன் தெரு | ரூ. 700/- |
| 2 | திரு.ஒய்.அந்தோணி, கொல்லம் மெயின்ரோடு, புளியரை | ரூ.750/- |
| 3 | திரு.எஸ்.பரமசிவன், அரியப்பப்புரம் | ரூ.650/- |
| 4 | திரு.சுப்பையா, காலாங்கரை, செங்கோட்டை | ரூ. 800/- |

ஏலத்தில் கலந்து கொண்ட 4 நபர்களில் வ.எண். 4 திரு.சுப்பையா என்பவர் உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ. 800/-க்கு இரண்டு தென்னை வெட்டி அப்புறப்படுத்த கேட்டுள்ளார். மேற்படி

உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு.சுப்பையா காலாங்கரை, செங்கோட்டை என்பவரின் ஏலக்கேள்விக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு..

1. தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு.சுப்பையா காலாங்கரை என்பவரின் ஏலக்கேள்விக்கு ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 197

ஒப்புதல் வழங்கப்பட்டது.